பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**31 08 2026** **MONDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி ஏழு புள்ளி எட்டு என்ற சாதனை அளவை எட்டியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) நாட்டின் பொருளாதாரம் வலிமையாக உள்ளதற்கு சீர்திருத்த நடவடிக்கைகளும், மக்களின் பங்களிப்புமே காரணம் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

3) நேபாள வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்தவர்களின் உறவினர்களுக்கு உதவுவதற்கென காட்மாண்டுவில் அலுவலர் குழு ஒன்று முகாமிட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

4) தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி குற்றம்சாட்டியுள்ளது.

5) உலக பாரா டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா ஆறு தங்கம் உட்பட 16 பதக்கங்களை வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>>>

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி ஏழு புள்ளி எட்டு என்ற சாதனை அளவை எட்டியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், சர்வதேச அளவில் கச்சா எண்ணெயின் விலை அதிகரித்து பொருளாதாரத்தில் தேக்க நிலை காணப்பட்ட போதிலும் நம்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த வலிமையுடன் இந்த சாதனை படைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசின் செயல்பாடுகள் குறித்து தவறான செய்திகளை பரப்பி வருபவர்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்த சாதனை அமைந்துள்ளதாக திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

நாட்டின் பொருளாதாரம் வலிமையாக உள்ளதற்கு மத்திய அரசின் சீர்திருத்த நடவடிக்கைகளும், மக்களின் பங்களிப்புமே காரணம் என்று தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையுடன் கூடிய தலைமைப் பண்பு காரணமாக ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி ஏழு

புள்ளி எட்டு சதவீத அளவுக்கு வளர்ச்சிக் கண்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

பள்ளிக் கல்வித் துறையின் செயல்பாடுகள் குறித்து மத்திய கல்வி அமைச்சர் திரு **Pralhad Joshi** இன்று ஆய்வு கொண்டார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்தில், பள்ளிக் கல்வித் துறையின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து அம்சங்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டதாக மத்திய அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

அடிப்படை கல்வி கட்டமைப்பை வலுப்படுத்துவது, தொழில்நுட்பம் சார்ந்த கற்பித்தல் முறைக்கு முக்கியத்துவம் அளிப்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளின் முதற்கட்டமாக வீட்டு வசதி கணக்கெடுப்பு பணிகள் நிறைவடைந்துள்ளன.

கடந்த ஒன்றாம் தேதி தொடங்கிய இப்பணிகள் இன்று நிறைவடைந்ததாக மத்திய அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இப்பணியில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் ஈடுபட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

நேபாள வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்தவர்களின் உறவினர்களுக்கு உதவுவதற்கென காட்மாண்டுவில் அலுவலர் குழு ஒன்று முகாமிட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

திரு சத்தியசிவம், திரு தினேஷ்கண்ணன், திரு அஜய் ஆகியோரைக் கொண்ட இந்த குழு காட்மாண்டுவில் உதவிகளை ஒருங்கிணைக்கும் பணிகளை மேற்கொள்வார்கள் என்று மாநில அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**9 8 6 8 2 0 7 2 5 9** என்ற எண்ணில் திரு சத்தியசிவத்தையும், **9 8 6 8 5 3 0 7 9 9** என்ற எண்ணில் திரு தினேஷ் கண்ணனையும், **9 8 6 8 2 2 4 0 4 9** என்ற எண்ணில் திரு அஜய்-யையும் தொடர்பு கொள்ளலாம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று மாநில அமைச்சர் திரு ஆதவ் அர்ஜூனா கூறியுள்ளார்.

இன்று சட்டப்பேரவையில் இதனைத் தெரிவித்த அவர், அதுவரை **69** சதவீத இடஒதுக்கீடு தொடரும் என்றார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இன்று நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் குற்ற சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக தெரிவித்தார்.

இதனை கட்டுப்படுத்த தவெக அரசு உறுதியான நடவடிக்களை மேற்கொள்ளவில்லை என்றும் திரு நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவை தலைவர் திரு ஜே சி டி பிரபாகர் நடுநிலை தவறாமல் சமநிலையுடன் செயல்பட்டு வருவதாக மதிமுக பொதுச் செயலாளர் திரு வைகோ கூறியுள்ளார்.

தென்காசியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சட்டப்பேரவையை திரு ஜே சி டி பிரபாகர் நடத்தும் விதம் பாராட்டுதலுக்குரியது என்றும் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

சிறு குறு நடுத்தர நிறுவனங்களுக்கான நிதி ஒதுக்கீட்டினை தமிழக அரசு அதிகரிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் மாநில செயலாளர் திரு வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தின் வருவாயை பெருக்குவதிலும், வேலை வாய்ப்பை உருவாக்குவதிலும் இந்த நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக கூறியுள்ளார்.

இந்த நிறுவனங்களை பாதுகாக்கவும், ஊக்கப்படுத்தவும் உரிய நடவடிக்கைகளை தவெக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நடப்பு நிதியாண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் இந்த துறைக்கு 2 ஆயிரத்து 142 கோடி ரூபாய்தான் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இதனை 3 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்க வேண்டும் என்று அந்த தொழில் துறையினர் கோரிக்கை விடுத்துள்ளதையும் திரு வீரபாண்டியன் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<<<>>>>>>

கொளத்தூர் சட்டப்பேரவை தொகுதியில் தவெக வேட்பாளர் திரு வி எஸ் பாபு வெற்றி பெற்றதை செல்லாது என அறிவிக்கக்கோரி திமுக

தலைவர் திரு மு க ஸ்டாலின் தாக்கல் செய்த மனுமீதான தீர்ப்பினை சென்னை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

தலைமை நீதிபதி திரு எஸ் ஏ தர்மாதிகாரி, நீதிபதி திரு அருள்முருகன் அமர்வு இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

முன்னதாக, திரு மு க ஸ்டாலின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு கபில் சிபல் வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் ஒப்புகைச்சீட்டுகளை சரிபார்க்கக் கோரி தேர்தல் முடிவுகள் வெளியான 3 நாட்களுக்குள் விண்ணப்பிக்கப்பட்டதாக கூறினார்.

இருப்பினும் தேர்தல் வழக்கினை தாக்கல் செய்வதற்கான காலக்கெடுவான 45 நாட்களுக்கு பிறகே வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்க்கப்பட்டதால் தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்வதை தவிர வேறு நிவாரணம் இல்லை என்றும் திரு கபில் சிபல் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

பாரத் பெட்ரோலியம் சார்பில் திருப்பூரில் நான்கு மணிநேரத்திற்குள் சிலிண்டர் விநியோகம் செய்யும் சேவை தொடங்கப்பட்டுள்ளதாக அதன் தென்மண்டல தலைவர் திரு மகேஷ்குமார் கூறியுள்ளார்.

இன்று திருப்பூரில் இந்த சேவையை தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

**(சவுண்ட் பைட் — சபரிஷ் — 40 செகண்ட்ஸ்)**

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு வி ஆர் துரை கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

**(சவுண்ட் பைட் — வி ஆர் துரை — 52 செகண்ட்ஸ்)**

<<<<<<<>>>>>>

மாவட்டச் செய்திகள்

நாமக்கல் மாவட்டத்தில் அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு மதுபாலன் பயனாளிகளுக்கு வழங்கினார்.

------------

தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் திடக்கழிவுகளை உரிய வகையில் பிரித்து தரவில்லை என்றால் அபராதம் விதிக்கப்படும் என்று ஆணையர் திருமதி பிரியங்கா கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

உலக பாரா டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா ஆறு தங்கம் உட்பட **16** பதக்கங்களை வென்றுள்ளது.

பின்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் ஒற்றையர் பிரிவுகளில் **4** தங்கம், **3** வெள்ளி, **3** வெண்கலப் பதக்கங்களையும், இரட்டையர் பிரிவுகளில் **2** தங்கம், **1** வெள்ளி, **3** வெண்கலப்பதக்கங்களையும் இந்தியா வென்றது.

------------------

சீனாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி நட்புணர்வு ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா **8-2** என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

சீனாவின் **Dalian-**ல் நடைபெற்ற இந்த தொடரை இந்தியா இரண்டுக்கு பூஜ்யம் என்ற ஆட்டக்கணக்கில் கைப்பற்றியுள்ளது.

------------------

ஸ்லோவேக்கியாவில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் **Aditya Mittal** மற்றும் **Abhimanyu Mishra** கூட்டாக பட்டம் வென்றனர்.

**<<<<<<<END>>>>>>>**